# பஹ்ரைன் தமிழ் கிறிஸ்தவ திருச்சபை

வாலிபர் ஜெப ஐக்கிய சங்கிலித்தொடர் ஜெபம் - ஆகஸ்ட் 2022

**நாள்:** 11th & 12th ஆகஸ்ட் 2022

**நேரம்:** வியாழன் மாலை 5 மணி முதல் வெள்ளி மாலை 5 மணி வரை

**"கர்த்தாவே, நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன்: என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்."**

**சங்கீதம். 5 : 2**

---

## துதிப்போம்:

- நம் மேல் இரக்கமாயிருந்து, நம் வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் கேட்டு நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் தந்து, கடந்த ஜூலை மாதம் முழுவதும் தம் கண்மணி போல் காத்தருளிய கர்த்தரை நன்றியுடன் துதிப்போம்.
- இந்த பஹ்ரைன் தேசத்திலும் நாம் நன்றியுடன் தேவனை ஆராதித்து போற்றும் படியாய் கிடைக்கப் பெற்ற நம் பஹ்ரைன் தமிழ் கிறிஸ்தவ திருச்சபைக்காகவும், இத்திருச்சபையின் மூலமாய் நாம் பெற்றுக்கொண்டுவருகிற உலகபிரகாரமான மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம்.
- நம் திருச்சபையின் ஆவிக்குரிய வளர்ச்சிக்குள்ளாய் பங்குபெற்றுவரும் புதிய குடும்பங்கள், தனிநபர்களுக்காகவும் எல்லா விசுவாசி களுக்காகவும், இம்மட்டும் பெற்றுவரும் அன்பிற்காகவும் ஐக்கியத்திற்காகவும் கர்த்தரை நன்றியுடன் மகிமைப்படுத்துவோம்.
- திருச்சபையின் அனைத்து ஊழியங்களையும் தங்கள் வருகையாலும், ஜெபங்களினாலும், உற்சாகமான காணிக்கைகளாலும் தாங்கி ஆதரித்து, திருச்சபைக்கு ஆதரவாய் இருந்துவரும் அனைத்து மக்களுக்காகவும் கர்த்தரை நன்றியோடு துதிப்போம்.
- நாம் வாழ்ந்துவரும் இந்த தேசத்தில் கர்த்தர் இரக்கமாய் நமக்கு தந்திருக்கும் பணி வாய்ப்புகளுக்காகவும், பணியாற்ற தந்துவரும் ஞானம், சுகம், பெலன், பாதுகாப்பு யாவற்றிற்காகவும் அவரைத் துதிப்போம்.

**ஜெபிப்போம்:**

- நம் திருச்சபையின் போதகருக்காகவும், ஊழியங்களை ஒருங்கிணைந்து செய்து வரும் செயற்குழுவினருக்காகவும் ஜெபிப்போம்.
- நமது பஹ்ரைன் தமிழ் கிறிஸ்தவ திருச்சபையின் மூலம் நடைப்பெற்று வருகிற ஆண்கள், பெண்கள் ஜெப ஐக்கியம், தனிநபர் மற்றும் குடும்ப ஜெபம், மிஷனரி ஜெபம், சிறுவர் வேதபாடசாலை, வாலிபர் ஜெப ஐக்கியம், உபவாச ஜெப கூடுகை, திருச்சபை மற்றும் சிறுவர் பாடகர் குழு போனற ஊழியங்களின் பொறுப்பாளர்கள், மற்றும் இதில் பங்குப்பெற்று நம் ஆண்டவரை மகிமைப்படுத்தி வரும் யாவருக்காகவும் மன்றாடுவோம்.
- நமது NEC அங்கத்துவ சபைகளுக்காகவும், போதகர்கள், காமன் கவுன்சில், சபை ஆட்சிக்குழு உறுப்பினர்கள், திருச்சபை மக்கள் யாவருக்காகவும் ஜெபிப்போம்.
- ஜுலை 17 முதல் நடைப்பெற்று வருகின்ற கோடைக்கால தமிழ் வகுப்புகளுக்காகவும், கற்றுக்கொள்ளும் பிள்ளைகளுக்காகவும், கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக் காகவும் மேலும் ஆகஸ்ட் 20 தேதி நடைப்பெறவுள்ள நிறைவு நாள் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒழுங்கும் சீராகவும் நடைப்பெற இறைவேண்டல் செய்வோம்.
- விடுமுறையை முன்னிட்டு தாயகம் சென்றிருக்கும், செல்லவிருக்கும் திருச்சபை மக்களின் பிரயாண இரக்கங்களுக்காகவும், பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.
- செப்டம்பர் மாதம் 16 தேதி முதல் நடைபெறவுள்ள மிஷெனரி எழுப்புதல் கூட்டங்களுக்காகவும், சிறப்பு செய்தியாளர் சுவிசேஷகர் சசி பிரபாகரதாஸ் அவர்களை நம் மத்தியில் ஆண்டவர் வல்லமையாய் பயன்படுத்தவும், அநேகர் இந்த கூட்டங்களில் பங்கு பெறவும், அதற்காக செய்யப்படுகிற ஒழுங்குகள் அனைத்தும் நன்மையும் செம்மையுமாக நிறைவேற்றப்படவும், ஊழியக்காரரின் விசா மற்றும் பிரயாணத்திற்காகவும், பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டிற்காகவும் ஜெபிப்போம். மேலும் இவருடைய ஊழியங்களினால் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுவருகிற மக்களின் ஆத்தும இரட்சிப்பிற்காகவும், ஊழியர் மற்றும் அவருடைய குடும்பத்தினரின் சுகம் பெலன் ஜீவனிற்காகவும் ஊக்கமாய் வேண்டுதல் செய்வோம்.

❖ மருத்துவ மற்றும் உயர் கல்விகளுக்காக NEET, JEE போன்ற தேர்வுகளை எழுதியிருக்கும் பிள்ளைகள் தேர்வுகளில் வெற்றியடையவும், விரும்பிய துறைகளில் உயர்க்கல்வி பயிலவும் ஜெபிப்போம்.

❖ சரீர பெலவீனத்தின் மத்தியில் பரம வைத்தியராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தொடுதலுக்காய் காத்திருப்போர், துன்பத்திலும் துயரத்திலும் ஆறுதலுக்காய் காத்திருப்போர், பலதரப்பட்ட தேவைகளோடிருப்போர், கர்ப்பிணிப்பெண்களின் பேறுகால விடுதலைக்காக, குழந்தை செல்வங்களுக்காக வேண்டுதல் செய்வோருக்காக, திருமண வாழ்விற்காய் காத்திருப்போருக்காக ஜெபிப்போம்.

❖ மாறிவரும் காலநிலை சூழலால் மக்களுக்கு பலவீனங்கள் ஏற்படாதிருக்கவும், வியாதிகள் ஏற்படாதிருக்கவும் கருத்தாய் ஜெபிப்போம்.

❖ நாம் வாழ்ந்துவரும் இந்த பஹ்ரைன் தேசத்தில் சமாதானம் மற்றும் அமைதி நிலவவும், மக்கள் நலமுடன் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.

## மிஷனரி ஸ்தாபனங்களுக்கான ஜெப விண்ணப்பங்கள்

கர்த்தருடைய அளவற்ற கிருபையினால் இதுவரை **54** மிஷனரிகளைத் தாங்கி வருகிறோம், திருச்சபையின் 56 ஆண்டு கால நிறைவை ஒட்டி இந்த மாதம் முதல் மேலும் 2 மிஷனரிகளுடன் சேர்த்து **56** மிஷனரிகளை தாங்க உள்ளோம், இதற்காக உற்சாகமாய் ஜெபிப்போம்.

### ❖ Tribal Mission:

1. பழங்குடி மக்களிடையே இயேசுவே இரட்சகர் என்று அறிவித்து வருகின்ற இவ்வூழிய ஸ்தாபனத்தின் திருப்பணிகள் கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத், மத்திய பிரதேசம், ஒரிசா, ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் 150க்கும் மேற்பட்ட பணித்தளங்களில் நடைபெற்று வருகின்றன, மேலும் இவ்வூழியங்கள் இந்தியாவின் இதர மாநிலங்களிலும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டியும் ஊக்கமாய் ஜெபிப்போம்.
2. கர்த்தருக்கு ஆத்தும அறுவடை செய்வதற்கு தேவையான ஊக்கமும் வாஞ்சையும் உள்ள சுவிசேஷ ஊழியர்கள் கிடைக்கப்பெற வேண்டி ஊக்கமாய் ஜெபிப்போம்.

3. ஊழியங்களை தாங்கும் மற்றும் தேவைகளின் மத்தியில் வாடும் மக்களின் தேவைகள் சந்திக்கும்படியாய் தேவாதிதேவனிடம் வேண்டுதல் செய்ய தேவையான ஜெப பங்காளர்கள் கிடைக்கப் பெறவும் ஊழியத்திற்கு தேவையான பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட வேண்டியும் ஊக்கமாய் ஜெபிப்போம்.
4. நம் திருச்சபையின் மூலம் தாங்கப்பட்டுவரும் ஊழியர்கள்
    1. **சகோதரர், L. பாபி-** செக்கடி, இடுக்கி மாவட்டம், கேரளா
    2. **சகோதரர், G. N. கண்ணன்,** கொரங்கட்டி, இடுக்கி மாவட்டம்,
    3. **சகோதரர். குமரன் ராம்சே,** சின்ன பாறைகுடி, இடுக்கி மாவட்டம், கேரளா
    4. **சகோதரர். E.P. சஞ்சு**, மண்குளம், இடுக்கி மாவட்டம், கேரளா

ஆகியோருக்காகவும் மற்றும் குடும்பத்தினர்களின் சுகம் பெலன் ஜீவனிற்காகவும், பிள்ளைகளின் கல்விக்காகவும் அவர்களுடைய ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம்.

❖ ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட விசுவாசிகளின் ஆத்தும வளர்ச்சிக்காகவும், ஆண்டவரை அறிகிற அறிவிலும் சத்தியத்திற்குள்ளும் வேரூன்றி வளரவும் வேண்டுதல் செய்வோம்.

## 100 கிராம ஊழியம் (Tamil Village Gospel Mission- TVGM), திருச்சி

**100 கிராம ஊழியம** (TVGM) – 1979 – ம் ஆண்டு இயேசு கிறிஸ்துவின் சுவிஷேத்தை கூறி பல ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதற்க்காக ஆத்மபாரத்துடன் சகோதரர் திரு. P.T. கிறிஸ்டோபர் அவர்களால் துவங்கப்பட்டது. மேலும் ஆலயங்கள் இல்லாத கிராமங்களில் இருந்து ஊழியங்கள் செய்துவரும் தன்னிச்சையான போதகர்களுக்கு “ஜெப வீடு”கள் கட்ட TVGM உதவி செய்து வருகிறது. மேலும் இரண்டு சிறுவர்களுக்கான இல்லங்கள், தையல் பயிற்சி பள்ளி, தொழு நோயாளிகள், கண்பார்வையற்றோர், விதவைகள் மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் தங்கியிருக்கும் மக்களிடையிலும் தங்களுடைய சமூக நலபணி டிரஸ்ட் மூலம் ஊழியங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

- **சகோ. பன்னீர்செல்வம்** அவர்கள் நமது திருச்சபையின் மூலம் தாங்கப்பட்டு வருகிறார். அவர்கள் பணித்தள ஊழியங்களின் ஒருங்கிணைப்பாளராக பணி செய்து வருகிறார். அவர்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும், குடும்பத்தின் மக்களுக்காகவும் ஜெபிப்போம். இந்த கனமான பணியினை செய்வதற்க்கு வேண்டிய ஞானத்தையும் பெலத்தையும் கொடுத்துவருகிற கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம்.

## United Mission to India (UMI)

இவ்வியக்கமானது கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு எதிர்நிற்கும் மக்களிடையே ஊழியம் செய்து வருகிறது. உண்மையான ஆண்டவரை அறியாத மக்களிடையே முழு ஈடுபாட்டோடும் தியாக மனப்பான்மையோடும ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறித்ததான நல் ஊழியங்களை செய்து வருகிறது. மருத்துவம் மற்றும் கல்வி உதவிகளின் மூலம் இந்த மக்கள் சந்திக்கும்படியான கதவுகள் திறக்கப்பட்டு வருகின்றன. UMI ஊழிய ஸ்தாபனத்தின் மூலம் இந்தியா மற்றும் நேபாள தேசங்களில் கிறிஸ்துவை குறித்ததான ஊழியங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

சகோதரர், ஜான் பீட்டர் அவர்கள் நமது திருச்சபையின் மூலம் தாங்கப்பட்டு வருகிறார். அவர்கள் லிங்கவாடி (தமிழ்நாடு) பணித்தளத்தில் தம்முடைய ஊழியத் திருப்பணியை செய்து வருகிறார். அவர்களுக்காகவும், அவருடைய ஊழியங்களுக்காகவும், குடும்பத்தினற்களுக் காகவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

- **கம் ஊழிய ஸ்தாபனம் [ COME: Christian Outreach for Mission and Evangelism]** 1988-ம் ஆண்டு, ஆரம்பிக்கப்பட்டு நற்செய்தி ஊழியம் திறம்பட செய்யப்பட்டு வருகிறது. இந்திய தேசத்தில் எந்தவிதமான முன்னேற்றமுமின்றி மிகவும் பின் தங்கிய (Slum) குடிசைப் பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களின் அடிப்படை வாழ்வாதாரங்களை மேம்படுத்தி நல்வழிகாட்டி இரட்சகராம் இயேசுகிறிஸ்துவின் மீட்பின் செய்தியை அறிவித்துவருகிறது.

நம் திருச்சபையாக தாங்கிவரும் **திருமதி. ரோசி கிறிஸ்டினால்**, கக்கன்சி, கலினாபுரம் பணித்தளத்தில் ஊழியம் செய்துவருகிறார்கள், அவர்களுக்காகவும் அவர்களின் குடும்பத்திற்காகவும் ஜெபிப்போம்.

- **இந்திய வேதாகம மொழி பெயர்ப்பாளர் சங்கம் (Indian Bible Translators)**

நூற்றுக்கு மேற்பட்ட மொழிகள் கொண்ட நம் பாரத தேசத்தில் மெய்யான இரட்சகனை அறியப்படாத இடங்களிலெல்லாம் அவர் நாமத்தினை அறிவித்திட, எழுத்து வடிவம் உள்ள அவரவர் பேசும் மொழிகளில் பரிசுத்த வேதாகமத்தினை மொழி பெயர்த்திட, தங்களை முழுமையாய் அற்பணித்து இரவு பகல் என பாராது, அயராது உழைத்து வரும் இந்திய வோதாகம மொழி பெயர்ப்பாளர் சங்கத்திற்காக கருத்தாய் ஜெபிப்போம். இந்திய வேதாகம மொாழி பெயர்ப்பு சங்த்தில் நம் திருச்சபையாக தாங்கிவரும் 2 மிஷனறிகளுக்காவும் குடும்பங்களுக்காகவும் ஜெபிப்போம்.

**மஹாராஷ்டிரா கிராம ஊழியம் (Maharashtra Village Ministries)**

1970–ஆம் ஆண்டுகளில இறையியல் கல்வி மாணவர்களால் பக்கத்து கிராமங்களில் இயேசு கிறிஸ்துவை அறியாத மக்களிடம் சுவிசேஷம் அறிவிக்கும்படியாய் சிறிதாக ஆரம்பிக்கப்பட்டது. மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அனைத்து கிராமங்களில் வசிக்கும் இரட்சிக்கப்படாத, இயேசு கிறிஸ்துவை அறியாத கிராம மக்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷ நற்செய்தியை அறிவித்து, அடிப்படை தேவைகள் சந்திக்கப்படுவதற்கான உதவிகளையும் செய்துவருகிறது. நம் திருச்சபையாக தாங்கிவரும் சகோதரர் மறை திரு.சஞ்சீவ் சௌவான் அவர்களின் ஊழியருக்காகவும் குடும்பத்திற்க்காகவும் ஜெபிப்போம்.

**இந்திய தேசத்திற்கான ஜெப விண்ணப்பங்கள்:**

நாட்டில் பெருகிவரும் பொருட்களின் விலைவாசி உயர்வுகளுக்காக வேண்டுதல் செய்வோம், ஆளுகை செய்வோர் மக்களின் பிரச்சனைகளை உணர்ந்து விலைவாசி உயர்வுகளை தடுக்க தக்க நடவடிக்களை எடுக்க வேண்டி வேண்டுதல் செய்வோம்.

நமது இந்திய தேசத்திற்காகவும், ஆட்சியாளர்களுக்காகவும், நாட்டு மக்களின் நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபிப்போம்.

நமது இந்திய தேசத்தின் அமைதி, சமாதானம் மற்றும் பாதுகாப்பிற்காகவும், ஆளுகை செய்கிற ஜனாதிபதி, பிரதானமந்திரி மற்றும் இதர அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் அனைவருக்காகவும் வேண்டுதல் செய்வோம்.

## உலக தேசங்களுக்கான ஜெப விண்ணப்பங்கள்:

ரஷ்யா மற்றும் உக்ரைன் தேசங்களுக்கிடையே நடைப்பெற்றுவருகிற போர் நிறுத்தப்பட வேண்டுதல் செய்வோம், தாக்குதலின் நிமித்தம் உயிரிழந்த மக்களுக்காக, காயப்பட்டோர்களுக்காக, தங்களுக்கு அருமையானவர்களை இழந்து தவிக்கும் மக்களுக்காக, மீண்டும் நாட்டில் சமாதானம் நிலவி மக்கள் தங்களுடைய இயல்பு வாழ்விற்கு நேராய் கடந்து செல்ல ஊக்கமாய் வேண்டுதல் செய்வோம்

நாம் வாழ்ந்துவரும் பஹ்ரைன் தேசத்தின் அமைதி, சமாதானம் மற்றும் பாதுகாப்பிற்காகவும், ஆளுகை செய்கிற மன்னர், இளவரசர், பிரதானமந்திரி மற்றும் இதர அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் அனைவருக்காகவும் ஜெபிப்போம்.

---

- குறிப்பு:
- **மேலே குறிப்பிட்டுள்ள ஜெபக்குறிப்புகளை உங்களுடைய தனி ஜெபம், குடும்ப ஜெபம் மற்றும் ஜெபக் கூடுகையில் உபயோகப்படுத்தி ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறிர்கள்.**

---

*[Church circulation only]*

பொறுப்பு மிகுந்த வாழ்வு: **தீமோத்தேயு**




தீமோத்தேயுவுக்கு வயது 20, இளம் பிராயம். உலக ஆசா பாசங்கள் உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும் வயது இது. ஆனால், தீமேத்தேயு தீய காரியங்களை தீயிலிட்டு இயேசுவை உள்ளத்தில் ஏற்று ஊழியராக தன்னை அர்ப்பணித்தார். மிகவும் இளம் வயதினராகிய தீமோத்தேயுவை ஊழியராக்கிய பெருமை பவுல் அப்போஸ்தலனையே சாரும். பவுலுக்கு நீண்ட காலமாக உதவியாளராக இருந்தவர் தீமோத்தேயு.

இவரது தகப்பனார் ஒரு கிரேக்கர் . தாயார் ஒரு யூத பெண்மணி. பவுல் அப்போஸ்தலன் தனது முதல் மிஷனெரி பயணத்தின்போது லீஸ்திராவுக்கு வந்த வேளையில் தீமோத்தேயும் அவரது தாயாரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்.
தீமோத்தேயுவின் விசுவாசத்தையும், ஊழிய வாஞ்சையையும் கண்ட பவுல் இவரை தம்முடன் அழைத்து சென்றார். இவர் சிறந்த நற்சாட்சி பெற்றவர். மாயமற்ற விசுவாசம் கொண்டவர். விசுவாசத்தின் உத்தம குமாரனாக, அனைவரையும் விசுவாசத்திற்குள் வழி நடத்தியவர். தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பை மிகுந்த கவனத்தோடும். உண்மையோடும் நிறைவேற்றியவர்.
எபேசு சபையில் தனது பணியை தொடங்கிய இவர், புற மதத்து நம்பிக்கை புறமுதுகு காட்டி ஓட, புது மனிதர்களாக அந்நாட்டு மக்கள் ஆயினும், தீய சக்திகளின் நாச வேலை அவரை சூழ்ந்து கொள்ள அவர் மீது தடிகளையும், கற்களையும் வீசினார்கள். நல்ல போராட்டத்தை போராடிய தீமோத்தேயு, பவுல் அப்போஸ்தலனைப் போன்றே இரத்த சாட்சியாகவே மரித்தார்.
-: ஆண்டவரே! உம்மை சார்ந்தே என் பயணத்தை ஆரம்பித்து வெற்றியுடன் தொடர உதவி செய்யும்.